[18th March 1966

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** எல்லா ஐட்டங்களிலும் இல்லை. ஒரு சில ஐட்டங்களில் பணம் கட்டவேண்டும் என்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மற்ற சில ஐட்டங்களில் பஞ்சாயத்து தலைவர் தகுந்த பதில் தரவேண்டும் என்றும் வவுச்சர் கொடுக்க வேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட காலத்தில் பதில் அளிக்கவேண்டும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. அவ்விதம் கொடுக்கப்படுகின்ற பதில் திருப்தியாக இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது. திருப்தியாக இல்லாவிட்டால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்?

**திரு. ஆ. தங்கவேலு :** எவ்வளவு பணம் கட்டவேண்டும் என்று உத்தரவு போடப்பட்டிருக்கிறது?

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** முப்பது ரூபாய் ஒரு ஐட்டத்தில், 40 ரூபாய் இன்னொரு ஐட்டத்தில், பிற ஐட்டங்களைப்பற்றி எல்லாம் அவரிடமிருந்து பதில் வந்த பிறகு, அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ம. கமலநாதன் :** எந்தெந்த இனங்களில் இவ்வாறு தவருக செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று கூறியிருக்கிருர்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. சே. ம. அ. மஜீத் :** மரம் ஏலம் விடுதல், மீன் குத்தகை விடுதல், சாலை வீதி வேலைகள் இது போன்ற அம்சங்கள் தான். அதற்கு மேல் என்னிடம் தகவல் இல்லை.

### தேசியப் பாதுகாப்பு நிதி

*339 கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து :
திரு. எம். எஸ். மணி : } கனம் முதல்

அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சமீபத்தில் தமிழ்நாட்டு முக்கிய நகரங்களுக்கு சினிமா நடிகர்கள் யுத்த நிதித் திரட்டச் சென்ருர்களா ?

(இ) அவர்கள் சுற்று பிரயாணச் செலவு சர்க்கார் ஏற்றுக் கொண்டதா ?

(உ) ஆமெனில், மொத்தச் செலவு என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) No.

(c) Does not arise.

**திரு. ஜே. மாதா கவுடர் :** இந்த சினிமா நடிகர்கள் வசூலித்து கொடுத்த தொகை எவ்வளவு என்று சொல்ல முடியுமா?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** நாடகங்கள் மூலமாகவும் மற்றும் பல ஜில்லாக்களிலும் வசூலித்த மொத்தத் தொகை ரூ. 15,10,415; இதற்கு ஆன செலவு ரூ. 63,869-42 பைசா. நிகர வருமானம் ரூ. 14,46,545-58 பைசா.

18th March 1966]

**திரு. ஜே. மாதா கவுடர்:** சார், இந்த நிதி வசூலிப்பதில் எந்தெந்த நடிகர்கள் முக்கியமாக முயற்சி எடுத்துக்கொண்டார்கள் என்று சொல்ல முடியுமா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அந்த விவரங்களெல்லாம் என்னிடம் இல்லை.

**திரு. ம. கமலநாதன் :** தலைவர் அவர்களே, யுத்த நிதி திரட்டச் சென்றபோது ஆங்காங்கே உள்ள அதிகாரிகள் கட்டாயமாக டிக்கெட்டுகளை விற்றார்கள் என்று அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** இது யுத்த நிதிக்காக அல்ல— ஜவான்களுடைய குடும்பங்களுக்கு வசதி தேடுவதற்காக, ஜவான் களுக்கு வசதி தேடுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டது. அதிகாரி கள் கட்டாயப்படுத்திப் பணம் வசூலித்தார்கள் என்று சொல்லும் குற்றச்சாட்டை நான் ஏற்றுக்கொள்ள முடியாது. அவ்வாறு ஒன்றும் கட்டாயப்படுத்தப்படவில்லை. மக்கள் ஜவான்களுடைய குடும்பங்களுக்கு உதவி அளிக்கவேண்டும் என்று ஆர்வத்துன்ட உற்சாகத்துடன் இருந்தார்கள். அதோடு சிறந்த நடிகர்கள் நாடகம் நடிக்கிறார்கள் என்றால் அதைப் பார்க்கவேண்டுமென்றும் ஆசை. அப்படி இரண்டும் சேர்ந்து, மக்கள் தாராளமாக உதவி அளித்தார்கள்.

**திரு. பி. கே. மூக்கையா தேவர் :** தலைவர் அவர்களே, சினிமா நடிகர்கள் தாங்களாகவே முன் வந்து நிதி வசூலிக்க முற்பட்டார் களா ? அல்லது அரசாங்கம் கேட்டுக்கொண்டு அதன் பேரில் முன் வந்தார்களா ? அப்படியானால் எல்லா நடிகர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டதா ?

**கனம் திரு. எம். பக்தவத்சலம் :** அரசாங்கமாக ஒன்றும் செய்யவில்லை.

*340 கேள்வி—திரு. ஜே. மாதா கவுடர் :<br>
திரு. செ. மாதவன் :<br>
திரு. கரு. சீமைச்சாமி :<br>
} கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) இதுவரையில் யுத்த நிதிக்கு எவ்வளவு நிதி கிடைத் திருக்கிறது ?

(இ) இதில் ஜவான்களின் குடும்பங்களுக்கு என்னென்ன சவுகரியங்கள் செய்யப்பட்டிருக்கின்றன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) The total collections made in the Madras State towards the National Defence Fund up to 28th February 1966 are Rs. 4,37,49,963. Besides this, a sum of Rs. 29,50,349 was also collected towards the Madras State Jawans' Relief Fund up to 28th February 1966.